# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# ஆண்டிறுதிப் பரீட்சை 2021

ஆண்டு: 8 திகதி: 20.11.2021

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி. மாலினி சோமாஸ்கந்தன்

மாணவர் பெயர்: ______________________________

| வினாக்கள் | வினா புள்ளி | பெற்ற புள்ளி |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 20 | |
| வினா 3 | 10 | |
| வினா 4 | 10 | |
| வினா 5 | 15 | |
| வினா 6 | 25 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**தரப்பட்ட பகுதியை வாசித்து வினாக்களுக்கு முழு வசனத்தில் பதில் எழுதுக**

## வீரமாமுனிவர்

வீரமாமுனிவர் தமிழுக்கு அருந்தொண்டு ஆற்றிய ஐரோப்பிய அறிஞர்களுள் ஒருவர். அவர் இத்தாலி நாட்டில் பிறந்தார். அவருடைய இயற்பெயர் கன்ஸ்டன்ட் நியூஸ் ஜோசப் பெஸ்கி என்பதாகும். அவர் ஒரு பாதிரியார்.

வீரமாமுனிவர் இளமைக் காலத்திலிருந்தே பல மொழிகளை கற்பதில் ஆர்வம் உடையவராக இருந்தார். அவர் 1710 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வந்து தமிழ்நாட்டில் சமயத் தொண்டு புரியத் தொடங்கினார். தஞ்சாவூர், அரியலூர், மதுரை முதலிய ஊர்களில் பணிபுரிந்தார்.

வீரமாமுனிவர் தம் சமயத்தை தமிழ் நாட்டில் பரப்ப வேண்டும் என்ற ஆவலில் தமிழ் பயின்றார். அதனால் அவர் தமிழ் இலக்கண இலக்கியங்களை ஆழ்ந்து கற்று தேறினார். தமிழில் தாமே நூல் எழுதும் ஆற்றலைப் பெற்றார். பல இந்திய மொழிகளைக் கற்றிருந்தாலும் வீரமாமுனிவர் தமிழ் மொழியின் மீது அதிக பற்றும் ஆர்வமும் கொண்டிருந்தார்.

வீரமாமுனிவர் தமிழ்மொழிக்கு ஆற்றியுள்ள தொண்டு பாராட்டுக்குரியது. அவர் தமிழில் "தேம்பாவணி" என்னும் பெருங் காப்பியத்தை பாடினார். அவர் பல இலக்கண இலக்கிய நூல்களோடு "பரமார்த்த குரு" என்ற நகைச்சுவைக் கதை நூலையும் படைத்துள்ளார். முதன் முதலில் தமிழில் அகராதியை உருவாக்கியவரும் இவரே.

திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால் இரண்டையும் இலத்தீன் மொழியில் இவர் மொழிபெயர்த்துள்ளார். இந்நூலின் மூலம் ஐரோப்பியர்களும் திருக்குறளின் பெருமையை அறிந்து கொள்ள முடிகிறது.

1) வீரமாமுனிவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

______________________________________________

______________________________________________

2) வீரமாமுனிவருக்கு எதில் அதிக நாட்டம் ஏற்பட்டது?

______________________________________________

______________________________________________

3) வீரமாமுனிவர் தமிழில் நூல் இயற்றும் திறனை எவ்வாறு பெற்றார்?

______________________________________________

______________________________________________

______________________________________________

4) “தேம்பாவணி” என்பது யாது?

5) ஐரோப்பியர் திருக்குறளின் சிறப்பை எவ்வாறு தெரிந்து கொள்கின்றனர்?

6) மேலே தரப்பட்ட பந்தியில் உள்ள பின்வரும் சொற்களுக்குப் பொருள் எழுதுக.

தொண்டு

பயின்றார்

பெருமை

நூல்

ஆவல்

| வினா இல | 2 | புள்ளிகள் | 20 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி 5 சொற்களுக்குக் குறையாமல் வசனம் எழுதுக**

1) சலசல

2) படபட

3) கமகம

4) கலீர் கலீர்

5) வேட்பாளர்

6) களஞ்சியம்

7) பட்டிமன்றம்

8) அரங்கேற்றம்

9) நூதனசாலை

10) சுயசரிதை

| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் நேர்முக வர்ணனையை வாசித்து வினாக்களுக்கு முழு வசனங்களில் விடை தருக.**

> வணக்கம் நேயர்களே!
>
> இப்பொழுது தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்காக சிட்னி விளையாட்டு அரங்கில் இருந்து உங்களுடன் பேசிக் கொண்டிருப்பவர் கபிலன். இன்னும் சில நிமிடங்களில் அவுஸ்ரேலிய அணிக்கும் இந்திய அணிக்கும் முதலாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஆரம்பமாக உள்ளது. பூவா தலையா போட்டுப் பார்த்ததில் இந்திய அணி வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்துள்ளது. இம்முறை இந்திய அணி மிகவும் வலுவான நிலையில் உள்ளது. அதேவேளை அவுஸ்திரேலிய அணியின் மூன்று அனுபவம் வாய்ந்த வேகப்பந்துவீச்சாளர்கள் இருப்பது அந்த அணிக்கு மேலும் பலம் சேர்க்கின்றது.
>
> இதோ போட்டி ஆரம்பமாகவுள்ளது.

1) ஒருநாள் கிரிக்கெட் போட்டி எந்த விளையாட்டரங்கில் நடைபெறுகின்றது?

________________________________________________

________________________________________________

2) இன்றைய கிரிக்கெட் போட்டியில் மோதும் அணிகள் எவை ?

________________________________________________

________________________________________________

3) முதலில் துடுப்பெடுத்தாடும் அணி எது?

________________________________________________

________________________________________________

4) நேர்முக வர்ணனை வழங்கிக் கொண்டு இருப்பவர் யார்?

________________________________________________

________________________________________________

5) எந்த அணியில் அனுபவம் வாய்ந்த பந்துவீச்சாளர்கள் உள்ளார்கள் என்று வர்ணனையாளர் கூறுகின்றார்?

________________________________________________

________________________________________________

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 6 |
| --- | --- | --- | --- | --- | --- |

உயர்தரப் பரீட்சைக்கு தமிழை ஒரு பாடமாக எடுக்க விருப்பம் இல்லாது இருந்த உமது அபிப்பிராயம் தற்போது மாற்றமடைந்துள்ளது. மனமாற்றம் எதனால் எப்படி உருவானது என்று விளக்கி, தீர்மானத்தை வெளிநாட்டில் வாழும் உமது நண்பருக்குக் கடிதம் ஒன்று எழுதுக. கடிதம் 100 சொற்களுக்குக் குறையாமல் அமைய வேண்டும்.

- BLANK PAGE -

| வினா இல | 5 | புள்ளிகள் | 15 | பக்கம் | 9 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்களை கொண்டு மூன்று வசனத்திற்கு குறையாமல் சிறு குறிப்பு எழுதுக.**

நாட்டார் பாடல்கள்

திருவள்ளுவர்

பாரதியார்

சிறுகதை

| வினா இல | 6 | புள்ளிகள் | 25 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**கீழேயுள்ள தலைப்புக்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக**

1) '**புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் மக்கள் தங்கள் கலாச்சாரத்தை தொடர்ந்து பாதுகாக்க முடியும்**' இந்தக் கூற்றை ஆராய்ந்து கட்டுரை எழுதுக
2) பார்த்து மகிழ்ந்த படம் அல்லது வாசித்த புத்தகம் ஒன்றைப் பற்றிய கட்டுரை
3) தனிநாயகம் அடிகளாரின் வாழ்க்கையும் அவர் தமிழுக்குச் செய்த தொண்டும்